## சுருக்கம்

கூட்டுறவுத்துறை – அறிவிப்புகள் 2021-2022 - மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு) அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு - திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு ரூ.1.75 கோடியில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வட்டியில்லாக் கடனாகப் பெற்று புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் நிர்வாக அனுமதி அளித்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஏ1)த் துறை**

**அரசாணை (டி.) எண். 162** — **நாள்: 27.11.2021.**

**ஸ்ரீ பிலவ வருடம், கார்த்திகை 11,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டவை:**

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் செயல்முறை ஆணை, ந.க.எண்:45696/2021/நுகூ.2, நாள்:31.08.2021.

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம், ந.க.எண்:45696/2021/நுகூ.2, நாள்: 28.10.2021.

----

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.08.2021 அன்று நடைபெற்ற 2021-2022-ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் (மானியக் கோரிக்கை எண்.12) போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் "திண்டுக்கல் கூட்டுறவு பண்டகசாலைக்கான புதிய கட்டடம் கட்டுதல்" குறித்த அறிவிப்பினை (அறிவிப்பு எண்.25) வெளியிட்டுள்ளார்கள்.

2. அவ்வறிவிப்பில் "திண்டுக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் ஆண்டொன்றுக்கு ரூ.33.70 கோடி வர்த்தகமாகிறது. கடந்த ஆண்டில் நிகர இலாபமாக ரூ.2.75 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது. பழமையான இந்த கட்டடத்தில் போதிய இடவசதி இன்றி பண்டகசாலை மற்றும் அலுவலகம் இயங்கி வருகின்றன. இதனுடைய வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக, இந்த கூட்டுறவு பண்டகசாலைக்கு புதிய கட்டடம் கட்ட கூட்டுறவு துறைக்கு சொந்தமான நிலம் 7,050-சதுர அடி உள்ளது. இந்த இடத்தில் புதிய பண்டகசாலை அமைக்கப்படும். இதற்காகும் செலவினம் ரூ.1.75 கோடி செலவினை கூட்டுறவு துறையே ஏற்கும்", என்றும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

(த.பி.பா)

3. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் செயல்முறை ஆணையின் மூலமாக, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.1.75 கோடி வட்டியில்லாக் கடனாகப் பெற்று திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

4. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதம் மூலமாக, மேற்படி வட்டியில்லாக் கடன்தொகை ரூ.1.75 கோடி நிதியில் மேற்காண் அறிவிப்பினைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக உரிய நிர்வாக அனுமதி வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, மேலே பத்தி 2-ல் படிக்கப்பட்ட மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.1.75 கோடி வட்டியில்லாக் கடனாகப் பெற்ற நிதியினைப் பயன்படுத்தி திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.

**<u>நகல்</u>**
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர் சென்னை - 9.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்,
சென்னை-10.
மண்டல இணைப்பதிவாளர், திண்டுக்கல்.
மேலாண்மை இயக்குநர், திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர்
கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, திண்டுக்கல்.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிஜி)த் துறை,
சென்னை - 9.
இ.கோ./உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

27/11/24
**பிரிவு அலுவலர்.**

27/11/2024